தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை–6.

ந.க.எண். 48176/எம்/இ1/2022, நாள்.09.08.2022

பொருள்: பள்ளிக்கல்வி –போதை விழிப்புணர்வு உறுதிமொழி – அனைத்து வகைப் பள்ளி மாணவர்கள் உறுதிமொழி எடுத்தல் – தொடர்பாக.

பார்வை:
1. சென்னை–6, பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், ந.க.எண்.019527/எம்/இ1/2022, நாள்.06.08.2022
2. அரசுக்கடிதம்எண்.18574/பொது1(2)/2022–1, நாள்.08.08.2022.

*****

பார்வை 1–இல் காணும் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு அனைத்து அரசு / அரசு உதவிபெறும் / சுயநிதி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 11.08.2022 முற்பகல் 10.30 மணிக்கு விழிப்புணர்வு உறுதிமொழி எடுக்கும் நிகழ்வும் 12.08.2022 முதல் 19.08.2022 வரை விழிப்புணர்வு வாரத்தைத் தொடர்ந்து செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, மேற்கூறிய அனைத்து வகைப் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களிடையே போதைப் பொருள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த இணைப்பில் கண்டுள்ளவாறு 11.08.2022 அன்று முற்பகல் 10.30 மணிக்கு உறுதிமொழி எடுக்க அனைத்துப் பள்ளித் தலைமை ஆசிரியர்களை அறிவுறுத்தவும், அந்நிகழ்விற்குப் பின் நேரலையில் கல்வி தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் விழிப்புணர்வு குறும்படத்தை மாணவர்களுக்குக் காட்டவும், உறுதிமொழி எடுத்த விவரத்தினை இணைப்பில் கண்டுள்ள படிவத்தில் பள்ளிவகை வாரியாக நிரப்பி இவ்வாணையரக இணை இயக்குநர் (நாட்டு நலப்பணித் திட்டம்) msectndse@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு பிற்பகல் 12.30 மணிக்குள் கல்வி மாவட்ட வாரியான அறிக்கையினை அனுப்பி வைக்க மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு:
1. பார்வையில் காணும் அரசுக் கடிதம்
2.உறுதிமொழி– ஒளி நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
3. உறுதிமொழி படிவம் (பள்ளிவகை வாரியாக)
4. DEO / CEO ஒட்டுமொத்த விவரப்படிவம். (மாவட்ட வாரியாக).

9.8.22

பள்ளிக்கல்வி ஆணையருக்காக

பெறுநர்
1.அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
2.அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

நகல்
அரசு முதன்மைச் செயலாளர்,
பள்ளிக் கல்வித்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை–9. (தகவலுக்காக அனுப்பப்படுகிறது).

048176
M

**School Education Department**
**Secretariat, Chennai-9.**

**Letter No.18574/GL1(2)/2022-1, dated 08.08.2022**

**From**
Tmt. K. Jeyalalitha, B.Sc.,
Deputy Secretary to Government.

**To**
The Commissioner of School Education,
Chennai-6.(w.e.)
The Director of Matriculation Schools,
Chennai-6.(w.e.)
The Director of Elementary Education,
Chennai-6.(w.e.)

பள்ளிக் கல்வி ஆணையர் அலுவலகம்
0 8 AUG 2022
சென்னை-6

**Sir,**

Sub: School Education –Drive Against Drugs எனக்கு வேண்டாம் (Ennaku Vendaam) Campaign- to be held at Kalaivanar Arangam on 11.08.2022 – Copy of Pledge Sending -Regarding.

Ref: From the Additional Director General of Police(crime), Police Department, Chennai. Letter.No.014-011/ADGP/Cr./Camp/2022, Dated: 06.08.2022

-----------------

I am directed to state that the Additional Director General of Police has stated that the Honourable Chief Minister of Tamil Nadu has consented to attend the massive Anti-Drug Awareness Programme to be conducted in Kalaivanar Arangam on 11.08.2022. and will lead the Anti-Drug Pledge across the State in all schools and colleges. In this connection, a pledge to be administered on the function is enclosed herewith both in Tamil and English for communicating the same to all schools of the state functioning under the control of School Education department.

2. I am therefore to request you to issue necessary instructions to the officials under your control to participate the students/teachers to take pledge on 11 August, 2022 i.e Pledge Against Drug Abuse.

Yours faithfully,

08/08/2022

for Deputy Secretary to Government.

# போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி

போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளை நான் முழுமையாக அறிவேன். நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாகமாட்டேன். மேலும் எனது குடும்பத்தினரையும், நண்பர்களையும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். போதைப் பழக்கத்திற்குள்ளானவர்களை மீட்டெடுத்து அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாகத் தருவேன்.

போதைப் பொருட்களின் உற்பத்தி, நுகர்வு, பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் போதைப் பொருட்களை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்குத் துணைநிற்பேன். மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் நான் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதிகூறுகிறேன்.

**நன்றி! வணக்கம்!**

# PLEDGE AGAINST DRUG ABUSE

I am thoroughly aware of the ill effects of drug abuse and I solemnly promise not to indulge in drug abuse. I also swear my sincere contribution to prevent and advise my family members and friends not to fall into the habit of drug abuse. I assure to fully contribute for the cause of rescuing and guiding the drug abusers to give up drugs.

I will fully stand with the Government in their fight against the usage, consumption and manufacturing of illegal narcotic substances in order to eradicate them from Tamil Nadu. I affirm to contribute with utmost dedication towards the growth of the State and welfare of its people.

Thank you.

*(To be filled in the letter head of the Institution)*

This is to certify that the pledge against drug abuse led by the Hon'ble Chief Minister of Tamil Nadu has been taken by _________________ number of students in ____________ school / college on **11th August, 2022 at 10.30 hrs.**

Name of Institution :

Address of institution :

District :

Name of Head of Institution :

Signature of Head of Institution :

## **DEO / CEO Format** (Name of District)

Today on **11$^{th}$ August, 2022 at 10.30 hrs.** (total number) ___________ students of ______________ District have taken Anti-Drug Abuse pledge led by the Hon'ble Chief Minister of Tamil Nadu. The breakup detail is as follows :

| Sl. No. | Name of Institution | No. of Students taken pledge |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| ... | | |
| ... | | |
| Total number of Students taken pledge | | |

Name of DEO / CEO :

Signature of DEO / CEO :